**செய்தி வெளியீடு எண் : 1156** **நாள் : 06.08.2024**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் கடலில் மூழ்கி காணாமல்போன இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு. க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு</u>**

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகில் சென்று திரு. மூக்கையா (வயது 54), திரு. முத்து முனியாண்டி (வயது 57), திரு.மலைச்சாமி (வயது 59) மற்றும் திரு.இராமச்சந்திரன் (வயது 74) ஆகிய நால்வரும் 01.08.2024 அன்று அதிகாலை நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்குவந்த இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் திரு.மலைச்சாமி (வயது 59) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அவரது உடல் மற்றும் திரு.முத்து முனியாண்டி மற்றும் திரு. மூக்கையா ஆகியோர் இலங்கை கடற்படையினரால் 3.8.2024 அன்று ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், மீன்பிடி விசைப்படகு மூழ்கியதில் காணாமல் போன திரு.ராமச்சந்திரன் (வயது 74) த/பெ.வேலுதேவர் என்பவரை இந்திய கடலோரக் காவல் படை கப்பல்கள் கடந்த ஐந்து நாட்காளாக தேடியும் அவரது உடல் கிடைக்கவில்லை.

இச்சம்பவத்தில் கடலில் மூழ்கி காணாமல் போன திரு.இராமச்சந்திரன் குடும்பச் சூழ்நிலையைச் கருத்தில்கொண்டு அவருடைய குடும்பத்திற்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu